புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

පුදිය සමදර්මම් Puthiya samadharam


**பாலஸ்தீன போராட்டத்திற்கு ஆதரவு பெருக வேண்டும்**



→ 6

இதழ் 93 ஏப்ரல்2010 விலை ரூபா 20/=

# தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலை புறக்கணித்துள்ளனர்

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் வடக்குகிழக்கு பகுதியில் குறைந்தளவு வாக்களிப்பு வீதமே இடம்பெற்றுள்ளது. அரசாங்கம் எவ்வளவோ முயன்றும் தமிழ் மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டவில்லை நாடு முழுவதும் இந்தநிலை காணப்பட்டது. குறிப்பாக வடபகுதியில் 18% வீதமான வாக்குகளே பதிவாகியுள்ளன. மிகுதி 82% வீதமான வாக்குகள் பதிவாகாத நிலை காணப்படுகிறது. எனவே பெரும்பான்மையான தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கம் நடத்திய பாராளுமன்ற தேர்தலை புறக்கணித்துள்ளனர் என்றே கூறவேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு 9% வீதமான வாக்குகளை பெற்று விட்டு தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என மார் தட்டுகின்றது. 2004ம் ஆண்டு தேர்தலில் 70% வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்திருந்த நிலையில் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற பிரச்சினை வன்னி யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட போது தாம் அப்படி கூறவில்லை. என்றே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் தெரிவித்து இருந்தார். இன்று 9% வீதமான வாக்குகளை பெற்றுக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு தம்மை ஏகபிரநிதிகள் என கூறிவருவது நகைப்புக்குரியதாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிரேஸ்ட தலைவர்கள் வன்னியுத்தத்தில் இந்திய நலன் சார்ந்த செயற்பாடுகளிலேயே ஈடுபட்டடிருந்தனர். யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள இவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

வன்னியுத்தம் முடிவடைந்தவுடன் இந்திய அரசுடன் உறவை பலப்படுத்துவதில் இவர்கள் அதிக ஆர்வம் காட்டிவந்தனர். இதற்காக இவர்கள் பலமுறை பயணங்கள் மேற்கொண்டு இருந்தனர். பாராளுமன்ற தேர்தல் முடிந்த கையோடு இலங்கை அரசுடன் கைகோர்த்து செயல்பட ஆயத்தமாக இருப்பதாக சகிம்சையை வெளிப்படுத்தியுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடமாகின்றது 3 லட்சம் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை 12000 தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றனர். ஆயிரக்கணக்கில் மககள் காணாமல் போயும் உள்ளனர். இவை யாவற்றிலும் எதுவும் நடைபெறாத நிலையில் இந்திய முதலீட்டுக்கான அனைத்து செயற்பாடுகளும் முடக்கி விடப்பட்டுள்ளன. மேளதாளத்துடன் இந்திய முதலீடு வரவேற்கப்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதற்கு விடை தெளிவாகவே புலப்படுகின்றது. இத்தகைய நிலமைகளே தமிழ் மக்களை தேர்தலில் இருந்து ஒதுங்க வைத்துள்ளது. தமிழ் மக்கள் இன்று யாரையும் நம்பத்தயார் இல்லை என்ற செய்தியே அவர்களின் தேர்தல் புறக்கணிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை விட அரசாங்கம் வெறும் மூவாயிரம் வாக்குகளாலேயே கூடுதலாக பாராளுமன்ற தேர்தலில் வடபகுதியில் பெற்றுள்ளது இதற்காக அரசாங்கம் ஆட்சிபலம், ஆட்சி வளம் என அனைத்தையும் பாவித்தும் தமிழ் மக்களை தமது பக்கம் இழுக்க முடியாமல் போய் உள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினதும் இந்திய ஆளும்தரப்பினதும் கூட்டுச்சதி விரைவில் அம்பலமாகும் அப்போது தமிழ்மக்களின் உண்மையான ஏக பிரதிநிகள் யார் என்பது வெளிச்சத்துக்கு வரும்.




அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்

# வசதி படைத்தவர்களே சரணாகதிஅரசியலை செய்தார்கள் ஏழைகள் சுதந்திரத்திற்காக போராடுவார்கள்!

## ரணத் குமாரதுங்காவின் கேள்வி பதில்கள்

கேள்வி :- நீங்கள் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கு உரிய நியாயங்கள் என்ன?

பதில் :- நாங்கள் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடன் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இணைந்து செயற்பட்டு வருகின்றோம். தோழர் சிவாஜிலிங்கம் கடந்த 5 வருடங்களாக எமது போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வந்துள்ளார். காணாமல்ப் போனவர்களின் போராட்டங்கள் சிறைக்கைதிகள் விடுதலக்கான போராட்டம் யுத்த எதிர்ப்பு போராட்டம் என அனைத்திலும் இவர்கள் கலந்து கொண்டுள்ளனர். விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலும் பின்னைய காலத்திலும் வெளிநாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் சிவாஜிலிங்கம் எம்முடன் கலந்து கொண்டு, வெளிநாட்டு தலைவர்களை எமக்கு அறிமுகப்படுத்தி இருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கமே சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்த்துப் போராட முன்வந்தார். ஏனையவர்களை சிங்கள பௌத்த பேரின வாதத்துடன் உறவைப் புதுப்பித்தனர். சிலர் மௌனமாகினர்.

தமிழ் மக்கள் தரப்பில் இருந்து தென் இலங்க தொழிலாளர்களுடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பே முன்வந்தது. இது ஒரு வரலாற்று நிகழ்வாகும். வடக்கு, தெற்கு உறவுப் பாலத்தை கட்டி எழுப்ப முன்வரும் அவர்களுடன் இணைந்து செயற்படுவது எமது பொறுப்பாகும். எதிர் காலத்தில் இது தொடரும்.

கேள்வி:

வட்டுக்கோட்டைத் தீர்மானம் வேண்டாம் வயிற்றுப்பசியை போக்க உதவுங்கள் என்ற கருத்தியல் தொடர்பாக உங்களது அபிப்பிராயம்?

பதில்:

தமிழ் மக்கள் தேசியத்தை விரும்பாத சக்திகளின் கருத்தே இதுவாகும் ஓரளவு பணவசதி படைத்தவர்கள் இத்தகைய சரணாகதி அரசியல் கருத்துக்களை பரப்பி வருகின்றனர். ஏழை மக்கள் ஒரு போதும் இத்தகைய போக்கில் செயற்பட மாட்டார்கள். சொத்தில்லாத மக்களிடம் சுதந்திர உணர்வு அதிகமாக இருக்கும். சொத்து இருப்பவர்களிடம் அதைக் காப்பதற்காக அடிமைத் தன்மை உருவாகின்றன.

இவர்கள் இந்திய முதாளித்துவத்துடன் உறவு கொண்டு தமது முதலுக்கான இலாபத்தை அதிகரிக்க மயலக்கின்றனர். எனவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் மீண்டும் ஆரம்பித்தால் இந்திய முதலாளித்துவம் இங்கு வராது. எனவே இவர்களின் புலம்பல்களின் ஆழ அகலத்தை தமிழ் மக்கள் இலகுவில் இனம் காண்பார்கள்.

கேள்வி:

மலையக மக்களின் தேர்தல் முடிவுகள் என்ன செய்தியை தெரிவிக்கின்றன?

பதில்:

மலையகத்தில் வாக்களிப்பு வீதம் குறைவாகவே உள்ளது. நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகம், அடையாள அட்டை இல்லாது வாக்களிக்கும் உரிமையை இழந்தவர்கள் அதிகம். இருந்த போதும் மலையக மக்கள் போராட்டங்களுடன் தொடர்புபட்டவர்களை தெரிவு செய்துள்ளனர். போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தவர்களை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

கேள்வி:

இலங்கையின் எதிர்கால நிலைமை என்னவாக அமையும்?

பதில்:

பொருளாதார ரீதியாக பல பிரச்சனைகள் எழலாம் இன்று அரசாங்கம் பெற்றிருக்கும் கடனையும், வட்டியையும் கொடுக்கவே அரசாங்கம் திண்டாடுகிறது. உடனடியாக ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் ஆனால் அது உடனடியாக சாத்தியபட்டது. தற்போது அரசாங்கம் கட்டுமானப் பணிகளில் மட்டுமே ஈடுபடுகிறது. எனவே விலை வாசிகள் அதிகரிக்கும், பணவீக்கம் உயரும் இதற்கு எதிராக போராட்டங்கள் பல மேற் கிளம்பும். இந்த சூழ் நிலையில் தமிழ்த் தேசிய பிரச்சினையை தீர்ப்பது போல் அரசாங்கம் போலி முயற்சிளை மேற்கொண்டு தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்க முன்வரலாம்.

கேள்வி: தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மார்தட்டுகிறது அதுபற்றி உங்கள் கருத்து?

பதில்: நடந்து முடிந்த



தேர்தலில் இவர்கள் 9% தமிழ் மக்களின் வாக்குகளையே பெற்றுள்ளனர். தமிழ் மக்களின் உள்ள எந்த பிரிவினருக்கும் இவர்கள் பிரதிநிதிகள் என்பதே இன்றுள்ள கேள்வியாகும். வசதிபடைத்த தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றால் அது உண்மையாகும். விடுதலைப் போராட்டதில் கலந்து கொண்டவர்கள் ஏழ்மை நிலையான தமிழ் மக்களே இவர்களில் பலர் காணாமல்ப் போய் உள்ளனர். இவர்களில் பலர் சிறைகளில் உள்ளனர். இவர்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது. இந்தியாவுடன் உறவு கொள்ள எந்த தமிழ்ப் பிரிவினர் விரும்புகின்றனர். சாதாரண மக்கள் இந்தியாவை விரும்பமாட்டார்கள்.

# வட்டுக்கோட்டைத் தீர்மானம் வேண்டாம் வயிற்று பசியைப் பார்ப்போம்

சீலன்.

போராடுவது என்பது மனித சமுதாயத்தின் இயல்பாகும். மனித சமுதாயம் உருவாகிய காலம் தொட்டு போராடியதன் விளைவாகவே மனித சமுதாயம் இந்த நிலைக்கு வளர்ச்சி பெற்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் 60 ஆண்டுகள் அனுபவங்களைக் கொண்டது. பல்வேறுபட்ட போராட்டங்களின் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் விடப்பட்ட மூலோபாய தவறுகள் சர்வதேச சதிகள் பிராந்திய சக்திகளின் தொடர்ச்சியான தலையீடுகள் இவற்றின் ஒட்டு மொத்த விளைவாக தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோல்வியை தழுவியது. தமிழ் மக்களின் முழுமையான விடுதலையை விரும்புகின்ற எந்த ஒரு தமிழ் மகனும் அடுத்த கட்டப் போராட்டத்துக்கே தயாராவான் முன்னைய போராட்டங்களில் விடப்பட்ட தவறுகளை கருத்தில் எடுத்துக் கொண்டு அடுத்த கட்டப் போராட்டத்துக்கு நாம் தயாராக வேண்டும்.

இன்று தமிழ் மக்களின் மத்தியில் வாழ்கின்ற சில உதிரிகள் தமிழ் மக்களை சரணாகதி நிலைக்கு இட்டுச் செல்வதற்கு முயல்கின்றனர். போராடியது போதும் மக்களின் வாழ்வியல் நிலைகளை பார்ப்போம் என்ற தோரணையில் இவர்களின் போதனைகள் இடம்பெறுகிறது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கூட போராட வேண்டியதில்லை, அவர்கள் எமது மக்களின் வாழ்வு மேம்பட உதவிகள் செய்ய வேண்டும் என போதிக்கின்றனர். வன்முறை என்பது புதிய கருத்துக்கள கொண்டு வரும் மருத்துவிச்சி என்பது கார்ல் மார்க்சின் கருத்தாகும். அடிமை சமுதாயத்தை விடுவிப்பதற்காக 2000 ஆண்டுகளுக்கு முன்னர் போராடிய ஸ்பாட்டகஸ்சின் போராட்டங்கள் என்றாலும், இன்றைய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் என்றாலும் விடுதலைக்கான போராட்டங்களே.

எனவே போராட்டங்களை விரும்பாதவர்கள், எல்லாவற்றையும் இழப்பதற்கு தயங்கமாட்டார்கள் இன்று மக்களுக்கு சுதந்திரம் வேண்டாம் வயிற்றுப் பசியை பார்ப்போம் என்ற போதனையை ஏற்றால், தமிழ் மக்களுக்கு அடையாளமே தேவை இல்லை, பண்பாடு, நாகரிகம் எதுவும் தேவை இல்லை என்ற நிலையை நோக்கியே பயணிக்க வேண்டும். இது மனித சமுதாயத்துக்கு உரிய சுபாவமா? இயல்பா? இல்லவே இல்லை. மனித சமுதாயம் போராடியதன் விளைவாகவே அதன் ஒவொரு வளர்ச்சியையும் பெற்றது. இன்றைய முதலாளித்துவ யுகத்தில் வெற்றிகளை விட தோல்விகளே எம்மை நோக்கி வரும், இதன் அனுபவங்களை அடுத்த போராட்டத்திற்கு படிப்பினையாக கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் இந்தியா ஒரு போதும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவப் போவதில்லை.இது ஒர அடிப்படை உண்மையாகும். இந்த உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை என்னென்ன வழிகளில் நாசம் செய்ய வேண்டுமோ அதனையே இந்தியா செய்து வந்துள்ளது இனியும் செய்யும். இன்று சந்தர்ப்பவாத தலைமைகள் அனைத்தும் இந்திய முதலீட்டுக்கு பாய் விரிக்கின்றனர். இதன் விளைவை விரைவில் தமிழ்ச் சமுதாயம் உணரும்.

சுதந்திரத்துக்கான போராட்டம் தேவை இல்லை என்றால் நாம் போட்டிருக்கும் ஆடை கூட எமக்குத் தேவையில்லை பசியை போக்க உடலை விற்பது கூட நியாயமாகிவிடும்.

எனவே தமிழ் மக்கள் இத்தகைய நச்சு கருத்துக்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# பாராளுமன்றத் தேர்தலும். வெளிப்படுத்தியுள்ள உண்மைகளும்



(வ.திருநாவுக்கரசு)

2010 ஏப்ரல் 8ம் திகதி இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தல் பெறுபேறுகள் தொடர்பான பல்வேறு விமர்சகர்கள் எழுதிய பல கட்டுரைகள் ஏலவே வெளியாகியுள்ளன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (ஐ.ம.சு.மு) 1978ல் ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டதாகிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையில் ஒரு போதும் எட்ட முடியாதென எண்ணப்பட்டதும், பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைக்கு அண்மித்த பலத்தைப் பெற்றுள்ளமையானது ஒரு மகத்தான வெற்றியெனச் சில வட்டாரங்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

2009 மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டபின், இவ்வருடம் ஜனவரி மாதம் நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் பெற்றுக் கொண்ட அமோக வெற்றியை அடுத்து. அண்மைய பாராளுமன்றத் தேர்தலுமாக அடுத்தடுத்து 3 தடவைகள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குக் கிடைத்த "வெற்றிக்" (ர்ழவ -வசைஉம) என பிரபல அரசியல் ஆய்வாளர் தயான் ஜயத்திலக்க குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறத்தில் பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க) வழமையான பலவீனமும் அக்கட்சியின் பலம் குன்றிய தேர்தல் பிரசார நடவடிக்கை மட்டுமலலாமல் தேர்தலில் பெருவாரியான மக்கள் அக்கறையற்றிருந்ததன் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அமோக வெற்றி கிடைத்துள்ளமை ஒன்றும் புதிய விடயமல்ல, அளிக்கப்பட்ட வாக்கு வீத வீழ்ச்சியானது மக்கள் மத்தியில் காணப்பட்ட அக்கறையின்மைப் பிரதிபலித்திருப்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது நாடு 1948ல் சுதந்திரமடைந்த பின் மிக அதிகளவு வாக்காளர்கள் தேர்தலை எண்ணி நகையாடியது இதுவே முதல் தடவையாகும். அது மட்டுமல்லாமல் 26 வருடகால யுத்தம் காரணமாகச் சிதைவுற்றுள்ள வடக்கு, கிழக்கு பிராந்தியத்தைச் சார்ந்த மக்கள் அளித்த வாக்கு வீதம் 18% என்ற நிலையில் தேர்தல் முழுவதுமே ஒரு கேலிக்கூத்தாகவே நடந்தேறியுள்ளது எனலாம். அதில் ஒர படு அநியாயம் அல்லது மிலேச்சத்தனம் என்னவென்றால் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த 30,000க்கும் அதிகமான மக்களுக் வாக்களிக்கும் வாய்ப்பு அப்பட்டமாக மறுக்கப்பட்டமையாகும். அதாவது, அவர்களுக்காக தூர இடங்களில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிகளுக்குப் பயணிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பஸ்வண்டிகள் இறுதிநேரத்தில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் தலையீடு காரணமாக இடைநடுவில் வாபஸ்பெறப்பட்ட கைங்கரியமாகும்.

தேர்தல் பிரசாரங்களின் போது இடம்பெற்ற அடாவடித் தனங்கள், தேர்தல் தினத்தில் சில பகுதிகளில் குறிப்பாக தமிழ், முஸ்லிம் - வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளை அணுக விடாமல் துரத்தியமை, மற்றும் சில வாக்குச் சாவடிகளில் எதிரணி முகவர்கள் விரட்டியடிக்கப்பட்டமை தொடர்பாக பல ஆய்வாளர்கள் ஏலவே பதிவுகள் செய்துள்ள படியால் அவற்றை இங்கு மீண்டும் குறிப்பிட்ட வேண்டிய அவசியமில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலானது நீதியானதும் நியாயமானதும் என்பதற்கில்லை. மற்றும் வாக்களிப்பு வீத வீழ்ச்சி ஒன்றும் புதிய விடயமல்ல என எண்பிப்பதற்காக அரசாங்க பேச்சாளர்கள். குறிப்பாக முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அரும் பாடுபட்டுள்ளார். அது மேற்குலக ஜனநாயக நாடுகளிலும் கூட சர்வசாதாரண நிகழ்வென்றெல்லாம் அடுக்கியுள்ளனர். எவ்வாறாயினும், இலங்கையைப் பொறுத்தவரை, பாராளுமன்றத் தேர்தல்களின்போது வாக்களிப்புத் தொகை 75% அல்லது அதற்கும் கூடுதலாகவே இருந்து வந்துள்ளது நிச்சயமாக மூடி மறைத்து விடமுடியாது.

தேர்தல் பெறுபேறுகளின் பிரகாரம் அரசாங்க தரப்பினால் பாராளுமன்றத்தில் 2/3 அண்மித்த பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ளதைக் காணலாம். அதே நேரத்தில் அது நாட்டின் முழுவதுமான வாக்குப் பலத்தில் 1/3 தொகையிலிருந்து பெற்றுள்ள ஆசனபலம் என்பதை யாரும் மறந்து விட மடியாது. அதாவது நாடுபூராகவுமான வாக்களிப்பு 50-52% என்ற நிலையில், நாட்டின் மொத்த் வாக்குத் தொகையில் 35%க்கும் குறைவானதாகவே உள்ளது எனவே அரசாங்கம் பெற்றுள்ள அமோக வெற்றியெனக் கூறப்படுவது வெறுமனே அதிஷ்டவசமாகக் கிடைத்தது என்பது தான் நிதர்சனமாகும்.

இத்தகைய அதிர்ஷ்ட இலாபமானதொரு வெற்றியை ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு நல்ல சகுனம் நோக்கிய பயணத்தினை மேற்கொள்வதற்கு மனப்பூர்வமாகப் பயன்படுத்தலாம். அதாவது ஜனாதிபதி ராஜபக்ஷ நாட்டின் நீண்ட கால நன்மை கருதி நிஜமான துணிச்சலுடன் செயற்படுத்தற்கு மனங்கொள்வராயின் தான் ஒரு சிங்கள தலைவர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்ட நாட்டுத் தலைவர் எனும் அந்தஸ்துக்கு உயரவேண்டும். அவ்வாறாக நாட்டின் அனைத்து மக்களையும் உணர்வுபூர்வமாக அரவணைக்க வேண்டும். அத்தகைய அணுகுமுறை மூலமே நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் சுபிட்சத்தையும் ஏற்படுத்தலாம். அவ்வாறாகவே இலங்கை கம்பீரமாகக் காட்சியளிக்க முடியும். அந்த வகையில் 26 வருட யுத்தத்திற்கான ஆணிவேர்ப்பிரச்சினையான தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள, நிலையான அரசியல் தீர்வு அத்தியாவசியமானது என்பது ராஜபக்ஷ அசாங்கம் மறந்து விடமுடியாது. உண்மையில், தமிழீழ விடுதலைப் புலிகள் 1970/80களில் தோற்றம் பெற்றதற்கு தமிழரின் நியாயபூர்வமான உரிமைகள் மற்றும் அபிலாசைகள் தொடர்பாக இலங்கை அரசின் அசட்டையும் அதன் பயங்கர அடக்குமுறை யந்திரமுமே பிரதான காரணம் என்பதை இன்றைய அரசாங்கம் நிதானமாக ஜீரணித்துக் கொள்வது அவசியம் என்பது அரசியல் அரிவரியாகும்.

மாறாக ராஜபக்ஷ அரசாங்கம் தமக்குக் கிடைத்த அதிகபட்ச பலத்தின் மூலம் அதிகளவு அகங்காரமும் எதேச அதிகாரமும் கொண்டு புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் இன்றிச் செயற்படுமாயின், அது நிச்சயமாக எதிர் விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் எனலாம்.

அடுத்தது இறைமை என்பது யாது என்று பார்போமாயின், இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் அது சிங்கள - பௌத்த பெரும்பான்மை மேலாதிக்கத்திற்கு உரித்தானது அல்லது சமாந்தரமானது என தென்னிலங்கையில் நச்சுத்தனமாக அர்த்தம் கற்பித்து வந்துள்ளன. மாறாக, இறைமை என்பது உண்மையில் அனைத்து மக்களுக்கும் உரித்தானது என்பது தான் உணர்த்தப்பட வேண்டும்.

இறைமை மற்றும் அதிகாரம் இரண்டும் பதிர்ந்து பயன் அடையப்பட வேண்டும். அதுதான் நீடித்த சமாதாத்திற்கும் சுபீட்சத்திற்கும் உகந்ததாகும். சமஷ்டி முறைமை என்றால் அது பிரிவினை வாதம் என ஆளும் வர்க்கங்கள் தென்னிலங்கை மக்கள் மத்தியில் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ள நிலைமை உள்ளது. சிங்கள மக்களோ கிணற்றுத் தவளைகள் ஆக்கப்பட்டுள்ளனர். உலகில் ஏறத்தாழ 40% சனத்தொகையினர் சமஷ்டி ஆட்சி முறைமையின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். அவ்அவ் நாடுகளில் சமாதானமும் சுபீட்சமும் நிலவிக் கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு ஐரோப்பாவில் சுவிட்சலாந்து, பெல்ஜியம், போன்ற நாடுகள் நல்ல உதாரணங்களாய் விளங்குகின்றன. பெரிய பிரித்தானியாவை எடுத்துக் கொண்டால், ஸ்கொட்லாந்தில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பாராளுமன்றம் நிறுவப்பட்டுள்ளது. அடுத் வேல்ஸ் பிராந்தியத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்ட சபை நிறுவப்பட்டுள்ளது. அமெரிக்கா கூட ஒரு சமஷ்டி நாடாகவே உள்ளது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காமல் இலங்கையில் சிங்கள மக்களைக் கிணற்றுத் தவளைகளாக்கிய துர்ப்பாக்கிய நிலைமைதான் இந்த நாட்டின் அபசகுணமாகியுள்ளது. இந்த நிலைமை மாற்றப்பட்டாலே சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கை தலைநிமிர்ந்து நிற்கலாம் மாறாக வெறுமனே மார்தட்டி தலைநிமிர்ந்து நிற்கலாம். மாறாக வெறுமனே மார்தட்டி வாய்ச்சவடால் செய்து கொண்டிருப்பது நாட்டின் மதிப்பை மென்மேலும் இழப்பதற்கே வழிசமைக்கும்.

---

6

பாரம்பரிய விவசாய முறைமை உற்பத்தி செலவு குறைந்ததாகும். பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்பு பட்டும் இருந்தது. இது ஒரு சுதந்திரமான விவசாய முறையாகும். இந்த முறைமை இலங்கையில் இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அவசர உணவு உற்பத்தி என்னும் முறைமை இங்கே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விவசாயமுறையில் உற்பத்தியாளர், மில் உரிமையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், சந்தை, நுகர்வோர் என பல தொடர்புகள் உள்ளன. இங்கே உற்பத்தியாளருக்கும், விவசாயத்தின் மீது கட்டுப்பாடு இல்லை. நுகர்வோருக்கும் எத்தகைய கட்டுப்பாடும் இல்லாது உள்ளது. மேற்படி முறைமையினால் கிராமிய விவசாயத்திலிருந்து பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதன் விளைவாக அதிகமான வறுமைநிலை, பட்டினி நிலை, என்பன தலைவிரித்தாடுகிறது.

மாற்றீடான செயல்முறை

மேற்கூறப்பட்ட முறைமாற்றி அமைக்கப்பட வேண்டும் விவசாயத்துறைக்குள் வெளி உள்ளீடுகள் நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக இரசாயண பாவனை தடுக்கப்பட வேண்டும். மக்கள் பாரம்பரியமாக மேற் கொண்டு வந்த முறைமை மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும். பசுமைப் புரட்சிஎன்ற நாசம் நிறைந்த முறைமையும் பல் தேசிய கம்பனிகளின் செயற்பாடும் நிறுத்தப்படவேண்டும். தனிநபர் இலாப நோக்குடன் செயற்படுத்த நினைக்கும் விவசாய முறைமை அனுமதிக்கக் கூடாது. கூட்டு முயற்சிகள் உருவாக்கப்பட வேண்டும்.

இங்கே அரசாங்க தலையீடு நெல்லின் உத்தரவாத விலையை நிர்ணயிப்பதிலும், அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதிலும் இருக்க வேண்டும். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நன்மையானயுகம் மலர வேண்டும்.

# நிதி நெருக்கடிகளும் தீர்வுக்கான அடையாளமே இல்லாத நிலையும்.


கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன

வரலாற்றில் முதன் முறையாக உலகின் உள்ள சமுதாயம் முழுவதையும் பொருளாதார நெருக்கடி பதம் பார்த்துள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியானது இன்றும் தொடர்கின்ற நிலையில், அதனை முதலாளித்துவ உலகமயமாக்கலின் நெருக்கடி என்றும் விளக்கம் கூறுகின்றனர். இந்த நெருக்கடியில் இருந்து இலங்கை உட்பட எந்த நாடும் தப்பிக்க முடியவில்லை.

உலக முதலாளித்துவத்தில் பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் ஒவொன்றும் பின்னிப் பிணைந்த நிலையிலேயே உள்ளன. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை தற்செயலான ஒன்றல்ல. இது படிப்படியாக ஏற்பட்ட அடிப்படை பிரச்சினையாகும். இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை 1929க்குப் பின்னர் ஏற்பட்ட மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இதனால் அமெரிக்கா தனது செல்வ வளத்தில் 35% இழந்து நிற்கின்ற நிலையில் ஈரோ நாணய பிராந்தியம் தனது செல்வ வளத்தில் 25% இழந்து உள்ளது. அரசாங்கங்கள் தாம் இந்த நெருக்கடியில் இருந்து மீளுகின்றோம் எனக் கூறுவதை எம்மால் ஏற்க முடியாது. சில நாடுகளில் அரசாங்க செயற்பாடுகளினால் ஒரு தற்காலிக மீள் எழுகை ஏற்படலாம். ஆனால் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரையில் நெருக்கடிகள் அப்படியே உள்ளன. இன்று தெற்கு ஐரோப்பிய நாடுகளில் பொதுக்கடன் பளுவினால் பாரிய பிரச்சனைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக ஸ்பெயின் கிறீஸ் போன்ற நாடுகளில் வங்கித்துறையும், நிதிநிறுவனங்களும், நிச்சயமற்ற தன்மையில் உள்ளதால், ஐரோப்பிய் பகுதிகளில் புதிய சிக்கல்கள் எழுந்துள்ளன. தற்போது ஏற்றபட்ட நெருக்கடியானது சாதாரணமாக ஏற்படும் நிதிச் சிக்கல் அல்ல. இது நீண்ட காலமாக படிப்படியாக வளர்ந்து வந்த அடிப்படைப் பிரச்சனையாகும்.

உற்பத்தி தொடர்பான இந்த பிரச்சனைக்கு மாற்றீடாக 1970 இறுதிப் பகுதியில் நவதாராளவாத பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனாலும் பொருளாதார ஏற்றமும், இறக்கமும் தொடர்ந்து கொண்டே இருந்தது. இறுதியில் பொருளாதாரத்தின் அடிப்படையைத் தகர்க்கின்ற இன்றைய பாரிய பொருளாதார சிக்கல் ஏற்றபட்டுள்ளது.

வரலாற்று எல்லை.

இன்றைய பொருளாதார நெருக்கடி எமக்கு படம்பிடித்து காட்டுவது, முரண்பாடுகளின் ஆழத்தையும், முதலாளித்துவ பொருளாதாரத்தின் இறுதி நிலையையும் தெளிவாக காட்டுகிறது. இந்த நெருக்கடி நிதிச் சுற்றில் இருந்தே தோன்றியது. ஆனால் இதனால் வங்கி மற்றும் நிதி நிறுவன நெருக்கடிகளை குறைக்க முடியாமல் போயுள்ளது. இதற்கு முக்கிய காரணம் பாரிய மூலதனம், பெரும் எடுப்பிலான உற்பத்தி முறை ஆனால் நுகர்வு குறைவான நிலைமை.

1970 காலப்பகுதிக்கு முன்னைய மூன்று தசாப்த காலப் பகுதியில் பொருளாதார வளர்ச்சி படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. எனவே முதலாளித்துவம் இலாபத்தை அதிகரிக்க பல தற்காப்பு நடவடிக்கைகளை முதலாளித்துவம் மேற்கொண்டது. இதனால் தொழிலாளர்களின் வேதனம் குறைக்கப்பட்டது. தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் முன் எடுக்கப்பட்டது. வேலையற்றோர் நிலை அதிகரிக்கப்பட்டது. சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் குறைக்கப்பட்டன. இதே நேரம் வேதனங்கள் குறைக்கப்பட்டமையின், வெளிப்பாடாக பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்தது. பொருட்களின் நிரம்பல் அதிகரித்த நிலை காணப்பட்டது. எனவே கைத்தொழில் துறையில் இலாபம் குறைவடைந்தது. இதனால் கைத்தொழில் துறையில் முதலீடு செய்யும் ஆர்வம் குறைவடைந்து, நிதி சந்தையில் முதலீடு செய்யும் ஆர்வம் அதிகரித்தது. இதனால் உலக முதலாளித்துவம் சிக்கலுக்குள் சென்றது. அதிக இலாபத்துக்காக முதலாளித்துவம் தனியார், மற்றும் அரச துறைகளை நோக்கி நிதி சந்தைக்காக அலையத் தொடங்கியது. இதன் விளைவாகவே 2008ல் நிதி நெருக்கடி ஏற்பட்டது. வங்கியும், நிதி சந்தையும் முதன் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. அதிக இலாபத்துக்கான, முதலீட்டு வாய்ப்புக்காக தேடி அலையும் நிலையும் முதலீட்டுக்கு, தனியார் உரிமைக்கும் இடையே போட்டி நிலையும் ஏற்பட்டது. இந்த பொறி முறையின் விளைவால் பின்வரும் தாக்கங்கள் ஏற்பட்டன.

உலக நாடுகளில் பொருளாதார வளர்ச்சி 3 தொடக்கம் 4 விகிதமாக குறைந்தது. நாடுகளுக்கு இடையே பொருளாதார வளர்ச்சி சமமற்ற தன்மையில் காணப்பட்டது. இது 1 - 2% ஐரோப்பிய நாடுகளிலும் காணப்பட்டது. 2 - 3% விகிதமாக ஐக்கிய அமெரிக்காவிலும் 8 - 10% விகிதமாக இந்தியா சீனாவிலும் காணப்பட்டது. இந்தியா, சீனா நீங்கலாக உலக பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருந்துள்ளது. பொருளாதார மற்றும் ஒத்துழைப்புக்கான நாடுகளில் (OECD) வேலையற்றோர் நிலை 50 மில்லியனாக காணப்பட்டது. இவர்களை பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. உலக ரீதியில் 217 மில்லியன் வேலையற்றோர் உள்ளனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தகவல் பிரகாரம், ஸ்பெயின் நாட்டில் மட்டும் 20% வேலையற்றோர் உள்ளனர். ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பியாவிலும் வேலையற்றோர் நிலை 3 தொடக்கம் 5% விகிதமாக உள்ளது.

வேலையற்றோர் நிலை அதிகரித்தமையினால் அவசர உணவு வழங்கும் நிலையங்கள் ஐரோப்பியாவிலும், அமெரிக்காவிலும் அதிகரித்தது. அமெரிக்காவில் மட்டும் 27 பிரதான நகரங்கள் இந்த நிலையங்கள் உள்ளன. அரசாங்கங்களின் பொதுக் கடன் பளு 8 - 13% விகிதமாக அதிகரித்தது.

இந்த பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக அதிகாரத்தில் இருக்கும் வர்க்கம் தொழிலாளர் மீதும், பொதுமக்கள் மீது தாக்குதலை தொடுத்தது. தொழிலாளர் உலகம் முழுவதும் வேலை தேடி செல்லும் நிலை உருவானது. இதனால் போட்டி அதிகரித்தது. இதன் விளைவாக பாட்டாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் முரணபாடுகள் அதிகரித்துள்ளன.

நன்றி (லக்பிம ஆங்கிலம்)

---

# தமிழ் முஸ்லீம் உறவு பலம் பெற வேண்டும்.

கடந்தகால தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது அதில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களின் பங்கும் மறக்க முடியாததாகும். தமிழ் முஸ்லிம் உறவினை வளர்த்தெடுக்க வேண்டிய இக்காலகட்டத்தில் அவற்றை மீட்டுப் பார்க்க வேண்டிய கட்டாயமும் உண்டு. வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம், காத்தான்குடி பள்ளிவாசல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம், ஏராவூர் அழிஞ்சிப் பொத்தானை படுகொலை போன்ற நிகழ்வுகளும் சில பொறுப்பு வாய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்தில் உள்ளவர்களது வார்த்தைப் பிரயோகற்களும் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படுத்துவதற்கும் முஸ்லிம் இளைஞர்களது பங்களிப்புக் குறைவதற்கும் காரணமாய் அமைந்தது எனலாம். எனினும் கால ஓட்டத்தில் முஸ்லிம்கள் இவற்றை மறந்து இதயத்தில் எவ்வித கசப்புமின்றி தமிழ் மக்களுடன் தம் நல்லுறவ தொடர்ந்தும் பேணி வருகின்றனர்.

வட மகாணத்தைப் பொறுத்தவரை, யாழ்ப்பாணம், வவுனியா நகர், சாளம்பைக்குளம், காக்கையன்குளம், மன்னார், எருக்கலம்பிட்டி, முல்லைத்தீவு, போன்ற ஊர்களிலுள்ள முஸ்லிம் இளைஞர்கள், தமிழ் மக்களின் போராட்டத்தில் இணைந்து தம் இன்னுயிரை தியாகம் செய்துள்ளமை என்றும் மறக்கக்கூடியதல்ல. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை, நாங்கள் அறிந்த வரை அவரது பெற்றோர்களுடனும் சிறு வயதிலிருந்தே. 1962ம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டம் நடைபெற்ற காலத்திலிருந்து தமிழ் மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு முஸ்லிம் இளைஞனின் தியாகமும் மகத்தானது. இவரின் பெறுமதிமிக்க தியாகங்கள் மறக்கப்பட்டுள்ளதால் அதனை நினைவுபடுத்தவேண்டியது எமது தார்மீகக் கடமையாகும்.

## நன்றியுடன் தமிழ் பேசும் மக்கள்

1983ஆம் அண்டு தென்னிலங்கை முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளும் இனக்கலவரமும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னலை எடுத்துரைப்பதற்காக அவசரமாக இந்தியா செல்வதற்கு கட்டுநாயக்கா விமான நிலையம் செல்லவேண்டியிருந்தது. உயிராபத்து நிறைந்த அவ்வேளையில் தன்னுயிரையும் பொருட்படுத்தாது அமிர்தலிங்கம் அவர்களைப் பாதுகாத்துக் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அழித்துச் சென்று வழியனுப்பி வைத்தது. வவுனியாவைச் சேர்ந்த அம் முஸ்லிம் இளைஞனே. தமிழ் மக்களை மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களையும் கொன்றொழித்த அந்த ஆபத்தான சூழ்நிலையில் செய்யப்பட்ட அந்த இளைஞனத தியாகம் மறக்கவோ மறைக்கவோ முடியாததொன்றாகும்.

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டே அம் முஸ்லிம் இளைஞனது தியாகம் நீண்டகாலமாக தொடர்ந்து வந்ததை நாம் மட்டுமல்ல வவுனியா வாழ் தமிழ் பேசும் மக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

1977 தேர்தலில் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வவுனியாவில் போட்டியிடவில்லை அவ்வேளையில் மதவாச்சி பா.உ.மைத்திரிபால சேனநாயக்காவுடனும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடனும், வவுனியா பாராளுமனற உறுப்பினர் சிவசிதம்பரம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துப் பேசிக் கொண்டார்கள். தந்திரிமலையில் தற்காலிகமாக குடியேறிய சுதந்திரக் கட்சி வாக்காளர்களின் வாக்குகளை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெற்றுத் தருமாறும் அந்த சிங்கள மக்களுக்கு தமிழ் பேசும் மக்களின் அந்தஸ்துக்கு எவ்விதத்திலும் குறைவின்றி சகல தேவைகளையும் பெற்றுத்தருவதாகவும் வாக்களித்தார்கள். அதேபோல் அம் மக்களுக்கும் த.வி.கூட்டணிக்கு வாக்களித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் வவுனியா பா.உ.ரி.சிவசிதம்பரம் அவர்களுக்கும் உறுதுணையாகச் செயற்பட்டு களத்தில் முன்னின்று பாடுபட்டவர் இந்த முஸ்லிம் இளைஞன் ஆவார். இவருடன் முத்துராசா, நடராசா, இராசதுரை ஆகியோரும் இணைந்து செயற்பட்டனர்.

தொடரும்

# பாலஸ்தீன போராட்டத்திற்கு ஆதரவு பெருக வேண்டும்

(நடராஜா - ஜனகன்)

பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு அமெரிக்காவே பெரும் தடைக்கல்லாகும். மத்திய கிழக்கில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த அமெரிக்கா இஸ்ரேலை துரும்புச் சீட்டாக உபயோகிக்கிறது. மத்திய கிழக்கில் நிறைந்து காணப்படும். பெற்றோலிய வளத்துக்காக அமெரிக்கா இத்தகைய துரோக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

கடந்த மார்ச்மாதம் 2ம் தேதி மீண்டும் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் முறுகல் நிலை தோன்றியுள்ளது. இஸ்ரேல் படைகள் திடீரென பாலஸ்தீன பகுதிக்குள் பிரவேசித்ததால் மீண்டும் மோதல் தோன்றவே இரண்டு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பாலஸ்தீனியர்களும் மரணம் அடைந்துள்ளனர். மேலும் மூன்று பாலஸ்தீன குழந்தைகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2009ம் ஆண்டு ஜனவரி மாதம், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே மோதல்கள் மூன்று கிழமைகள் நடைபெற்ற பின்னர் இஸ்ரேல்படைகள் அங்கிருந்து வெளியேறின. இந்த மோதல் ஏன் ஏற்பட்டது என்பதை பாலஸ்தீன போராளி ஒருவர் விபரிக்கையில் இஸ்ரேல் பாலஸ்தீன பகுதிக்குள் 500 மீற்றர் முன்னேற முயன்ற போதே நாம் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோம். இதன்போது இஸ்ரேல் படைகளால் 1400 பாலஸ்தீன பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த மோதலில் பத்து இஸ்ரேல்படைகளும், மூன்று இஸ்ரேலிய பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என கூறுகின்றார்.

பாலஸ்தீன பகுதி மீது இஸ்ரேல் அத்துமீறி மேற்கொண்ட தாக்குதல்களுக்கு பாலஸ்தீன பகுதியில் இருந்து றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படதாலேயே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இஸ்ரேல் சமாதானம் கூறுகின்றது. ஆனால் 2000ம் ஆண்டில் இருந்து 2008 வரை உள்ள காலப்பகுதியில் 30 இஸ்ரேலியர்களே கொல்லப்பட்டதாக பாலஸ்தீன போராளிகள் வாதிக்கின்றனர். பாலஸ்தீன மக்களின் இழப்புடன் ஒப்பிடும் போது இது சிறு அளவே என்பது பாலஸ்தீன போராளிகளின் வாதமாகும்.

கடந்த 2008 டிசம்பர் மாதத்திலிருந்து 2009 ஜனவரி 18 வரையான மூன்று வார காலப்பகுதியில் இஸ்ரேலிய தாக்குதல்களால் 1400 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 15000 வீடுகள் சேதமாக்கப்பட்டன. இன்று பெரும்பாலான பாலஸ்தீனமக்கள் அகதிமுகாம்களிலேயே உள்ளனர்.



இஸ்ரேல் பாலஸ்தீன மக்கள் மீது பொஸ்பரஸ், யூரேனிய இரசாயன ஆயுதங்களை உபயோகித்தமைக்கான நிறைய ஆதாரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் இஸ்ரேல் பாலஸ்தீன பகுதியில் 5000 மேற்பட்ட யுதகுடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. பாலஸ்தீனம் இதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வந்தபோது, ஐரோப்பிய யூனியன் அமெரிக்காபாலஸ்தீன அதிகாரசபைக்கு நிதி உதவியை வழங்கி இந்த பிரச்சனையை பெரிதுபடுத்தவேண்டாம். என கேட்டுக்கொண்டன. இதனால் பாலஸ்தீன அதிகாரசபை தற்போது இந்த பிரச்சணையில் மௌனத்தை கடைப்பிடிக்கிறது இதன் எதிர் ஒலியாக பாலஸ்தீன கமாஸ் அமைப்பு பாலஸ்தீன அதிகார சபையை கண்டித்து வருகிறது. கடந்த 16 வருடங்களாக பாலஸ்தீன அதிகாரசபை இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தபோதும் இஸ்ரேல் சமாதானத்துக்கான எந்தவொரு நெகிழ்வு போக்கையும் கடைப்பிடிக்கவில்லை என்பதே கமாசின் குற்றச்சாட்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரிக்கவில்லை, பாலஸ்தீன பகுதிகளில் சட்ட பூர்வமற்ற மாற்றமுறையில் இஸ்ரேல் குடியிருப்புகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை மேலும் கடத்தல்கள், இராணுவ ஒடுக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள், என்பவற்றை இஸ்ரேல் தொடர்ந்தும் பாலஸ்தீனத்தின் மீது மேற் கொண்டு வருகிறது. அத்துடன் பாலஸ்தீனத்தை ஒரு அரசாக இஸ்ரேல் அங்கீகரிக்க மறுக்கின்றமை போன்ற குற்றச்சாட்டுகளை கமாஸ் கூறுகின்றது.

இறைமை இல்லாத மேற்கு கரை காசாபகுதியை அங்கீகரிக்க இஸ்ரேல் தயார், அத்துடன் விமான நிலையம் இருப்பதை கூட இஸ்ரேல் விரும்பவில்லை. தற்போது இஸ்ரேல் கிழக்கு ஜெருசலத்தில் 1600 இஸ்ரேல் குடியிருப்புக்களை உருவாக்க முயன்று வருகிறது. இது அங்குள்ள பாலஸ்தீனியார்களை வெளியேற்ற எடுக்கும் முயற்சியாகவே கருதப்படுகிறது.

இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் எதிர்ப்பைதடுக்க தற்போது சாதாரண துப்பாக்கிகளை பாவிப்பதில்லை என்றும் கனரக ஆயுதங்கள் மூலம் பாலஸ்தீன மக்களின் குரலை அடக்க முயல்வதாக குற்றம் சாட்டப்படுகிறது.

எனவே வல்லரசுகளின் ஆதரவோடு கனரக ஆயுதங்களோடு தம்மை எதிர்க்கும் இஸ்ரேலுடன் போராடுவது என்பது மிகவும் கடினமானது என்றும், பாலஸ்தீனத்தை பாலஸ்தீனர்களால் போராடி மட்டும் விடுவிக்க முடியாது என்றும் இஸ்ரேலின் இராணுவப்பலம் பாலஸ்தீனத்திடம் இல்லை என்றும், மனிதவளமும் இல்லையென்றும் எனவே உலக மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் கருதுகின்றது.

தற்போது உலகம் முழுவதும் இருந்தும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவான ஒத்துழைப்பு பெருகிவருவதால் பாலஸ்தீன மக்கள் தமது துயரில் இருந்து விடைபெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

---




2007ல் அமெரிக்காவில் கோல்டின் சசஸ், லேனேஸ், சிற்றி பாங்க் போன்ற பிரபல வங்கிகளிலும் அதோ போல் காப்புறுதி நிறுவனங்களும், வீழ்ச்சியடைந்ததையும் அதனையடுத்து ஏற்பட்ட மோசமான பொருளாதார பின்னடைவானது ஐரோப்பிய நாடுகள் முதல் பல நாடுகளுக்குப் பரவியதையும் யாரும் அறிவர். அந்த வீழ்ச்சியிலிருந்து சற்று மந்தமான நிலையிலாயினும் உலக பொருளாதார வளர்ச்சி மீட்சியடைந்து வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ இயக்குனர் டொமினிக் ஸ்ட்ரோஸ் கான் அண்மைய மாதங்களில் கருத்து வெளியிட்டு வந்தார்.

இன்று என்னவென்றால் பகையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல குறிப்பாக ஐரோப்பாவைக் கலக்கிய நிகழ்வு தான் ஐஸ்லாந்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பமாகும். அதனால் ஐரோப்பிய வான்பரப்பு முழுவதும் பரவிய புகைமண்டலம் மற்றும் சாம்பல் காரணமாக விமானசேவைகள் யாவும் நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆக நாளொன்றுக்கு 200 மில்லியன் டொலர் (ருளுனு) இழப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உண்டாகியுள்ளதாக அறியக்கிடக்கிறது. அகில உலகிற்குமான விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 63000 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் 68 இலட்சம் பயணிகள் அந்தரித்துள்ளனர் அது ஒருபுறமிருக்க கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றம் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருப்பதைக்காணலாம். காலநிலையில் பலத்த பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக பூகம்பம், சூறாவளி? வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்கள் உலகெங்கணும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் நாடுகள் காலம் காலமாகத் தானேதோன்றித் தனமாகப் பச்சைக்குடில் வாயுவை வழிமண்டலத்துக்குள் வெளியேற்றிக் கொண்டிருப்பதால் பூமி வெப்பமடைவதன் அடிப்படைக் காரணமாகவே பல அனர்த்தங்களும் அழிவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஒரு வருட காலத்திற்குள் இடம் பேற்ற அனர்த்தங்களைப் பார்பபோமாயின் முதலில் வறிய ஆபிரிக்க நாடாகிய ஹயிற்றியில் வெடித்த பூகம்பத்தை எடுத்துக் கொள்ளலாம். அந்த பூகம்பம் காரணமாக ஒருசில நிமிடங்களில் இரண்டு இலட்சம் மக்களைக்காவு கொண்ட பேரதிர்ச்சி உலக முதலாளித்துவ சக்திகளினின் மனச்சாட்சியை உறுத்தியதாகத் தெரியவில்லை பல உலக நாட்டுத் தலைவர்கள் அத்தகைய பிரளயத்தினையே இலகுவாக மறந்து போயுள்ளனர் என்றே கூறி விடலாம்.

மிக அண்மையில் சீனாவில் திபேத்து பீடபூமியை அண்டிய பகுதிகளில் வெடித்த பூகம்பமானது 2043 உயிர்களைக் காவு கொண்டுள்ளது. 193 பேர் காணாமற் போயுள்ளனர். 12000 பேர் காயமடைந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து உள்ளனர் அல்லது இறக்கின்றனர். பிரேசிலில் அந்த நாட்டு ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் சகிதம் டீசுஐஊ எனச் சுருக்கமாக அழைக்கப்படும் நான் பெரிய நாடுகள் மாநாட்டில் பங்குபற்று பற்றிக் கொண்டிருந்தசீன ஜனாதிபதி சீனாவில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இடைநடுவில் திடீரென சீன திரும்ப வேண்டியதாயிற்று. மற்றும் வட அப்கனிஸ்தான் பப்புவாநியு கினி மற்றும் மேற்கு அவுஸ்ரேலியாவிலும் பூகம்ப அனர்த்தங்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இடம்பெற்றுள்ளன.

காலநிலை மாற்றங்கள் மேற்படி அனர்த்தங்களை உண்டாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அவற்றுக்கு ஓரளவேனும் பரிகாரம் காண்பதற்கென கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவித பலனையும் கொண்டுவரவில்லை இறுதியாக சென்ற டிசம்பர் டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் 192 நாட்டுத்தலைவர் ஒன்று கூடி நடத்திய மாநாட்டின் பெறுபேறு பூச்சியத்திலும் கேவலமானதாகும். அங்கே வெனிசுலா ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் மற்றும் பொலிசிய ஜனாதிபதி ஈவா மொறாலெஸ் ஆகிய இருவரும் தான் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்தனர். உருப்படியான பெறுபேறு எதுவும் எட்டப்படவில்லை. அதனையிட்டு இலட்சகணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொதித்தெழுந்தனர். லண்டனிலும் பெரியதோர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது அங்கு பலர் கைது செய்து அடைத்துவைக்கப்பட்டனர். இத்தகைய காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறைகளை எதிர்த்து பல நாடுகளில் மக்கள் கிளர்ந்தெழும் காலம் வந்துவிட்டது.

# தமிழரின் உரிமைக்கான போராட்டத்தில் தொழிலாளர்கள்.

கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண

அரச ஊடகங்களில் வெளிவந்து இருக்கும் தகவல்களை பார்க்கின்றபோது, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், இலங்கை தொடர்பாக நிபுணர் குழுவை அமைக்கும் முயற்சியை மேற்கொள்வதற்கு மகிந்த ராஜபக்ஷ கடும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இம்முயற்சி தேவையில்லாத ஒன்று என்றும் இலங்கைக்கு பொருந்தாது ஒன்றும் என்று கூறியுள்ளார்.

மேலும் தனது கண்டனத்தின் தொடர்ச்சியாக ஆயுத மோதல்கள் நடைபெற்று வரும் நாடுகள், அங்கே நடைபெறும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல நிலையில் இலங்கை விடயத்தில் ஏன் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் கேட்டுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகாரம் எல்லா நாடுகளையும் ஒரே விதத்தில் நடத்த வேண்டும் என்றே கூறப்படுகின்றது, என்றும் மேலும் ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்றும் ஏற்பாடுகள் உள்ளன. எனவும் தனது அறிக்கையில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான விமல்வீரவன்ச தனது கண்டன அறிக்கையில் மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது இறைமை காப்பதில் கஸ்டங்களை ஏற்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளார். நான் நினைக்கின்றேன். இவர் பிரித்தானிய தூதரகாலயத்துக்கு முன்பாக செய்ததை விட, பலமான எதிர்ப்பு மறியல் போராட்டத்தை இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்துக்கு முன்பாக செய்ய முன்வரலாம்.

இதே நேரம் ராஜபக்ஷ அவர்கள் இன்றைய தேர்தல் நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் செயற்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் செயற்பாடுகள் ஆட்சியாளருக்கு அதிக இலாபத்தை வழங்கும் என்பதே எனது கருத்தாகும்.

பொருளாதார சுமைகளால் வாடி வதங்கியிருக்கும் மக்களை ஏமாற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரச்சாரம் விமல் வீரவன்ச போன்றவர்களுக்கு நல்லதொரு துரும்புச் சீட்டாகும்.

பயங்கரவாதத்திடம் இருந்து நாட்டை காப்பாற்றுகிறோம் என்பது தற்போது பழைய கோசம் ஆகியுள்ளது. மேலும் முன்னை நாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா அவர்களும் இந்த கோசத்துக்கு உரிமை கொண்டாடுகிறார். எனவே அரசாங்கத்துக்கு புதிய கோசம் இன்று தேவைப்படுகிறது. மறுபக்கத்தில் உலக எஜமான்கள் தமது முகவரை காப்பாற்ற தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்றெ எண்ணத் தோன்றுகிறது.

உலக எஜமான்கள் எதிர்பார்க்கும் பயங்கரவாதத்தை மகிந்த தோற்கடித்தார் என்பதால் அவர்கள் இவரின் ஆட்சியை உறுதி செய்ய எதையும் செய்ய முன்வரலாம் எம்மை பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக எம்மிடம் இரண்டு கருத்துக்கள் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பல்ல. ஆனால் ஐரோப்பிய பாராளுமன்றம் முதலாளித்துவ ஜனநாயகத்தையாவது செயற்படுத்துகிறது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையை ஐரோப்பிய பாராளுமன்றத்தின் நிலைக்கு சமமாக கருத முடியாத ஒன்றாகும். ஐரோப்பிய பாராளுமன்ற உலக அதிகாரதரப்பின் மையமாகும். இது உலக அதிகாரா சக்திகளின் நலன்களைப் பாதுகாக்கும் அமைப்பாகும். ஆனால் ஐக்கிய நாடுகள் சபை அப்படியானதல்ல. அதை உலக பாராளுமன்றமாக கொள்ள முடியாது. அது உலக அதிகார மையத்தின் கருவியாகும்.

எனவே தமிழ் மக்கள் ஐக்கிய நாடுகள் சபை தீர்வைப் பெற்றுத்தரும் என்பதில் நம்பிக்கை கொள்ள முடியாது மறுப்பக்கத்தில் பேயின் செயற்பாடுகள் கூட எமக்கு மகிழ்வை தரலாம். உலக முதலாளித்துவத்தை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தின் பக்கம் இழுக்க முடியும்.

ஜனாதிபதி அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், வேண்டுமென்றே இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார். நான் நினைக்கவில்லை அரசசார்பற்ற நிறுவனங்களின் அலோசனையின் பிரசாரம் ஏகாதிபத்திய சக்திகள் இயங்குமென் இந்த நிறுவனங்களுக்கு பணத்தை ஒதுக்குவதே அவர்கள் தான். ஆனால் அவரின் குற்றச்சாட்டில் ஒரு உண்மை உள்ளது. விடுதலைப் புலிகள் ஆதரவாளர் செல்வாக்கு என்ற கருததே அதுவாகும். மேற்கு நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் அங்கு வரப்போகும் தேர்தல்களில் செல்வாக்கு செலுத்தும் சக்தியாக இன்று உள்ளனர்.

ஒத்துழைப்பு அழைப்புக்கள்.

இன்று தொழிற்சங்கங்கள் இடதுசாரி அமைப்புகள் தமிழ்மக்களின் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தொடங்கியுள்ளன. அவை இன்று தீர்வை வலியுறுத்துவதோடு ஒடுக்கு முறைகளை நிறுத்தவும் கோருகின்றன. இதற்கு நவசமசமாச கட்சிக்கே நன்றி சொல்ல வேண்டும். எமது கட்சியின் கருத்தை சமூக ஜனநாயகவாதிகள் கேட்க தொடங்கியுள்ளனர்.

ஆனால் சரத்பொன்சேகா இறுதிநாள் யுத்தத்தில் மிக் மோசமான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என தெரிவித்தமை அதிக தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மகிந்த அரசாங்கம் சரத்பொன்சேகாவை சிறைப்படுத்தியது குற்றத்தை வலிமைப்படுத்தியுள்ளது.

# இலங்கையின் கிராமிய விவசாயம் அழிந்தமைக்கான காரணிகள்



லீனஸ் ஜெயதிலகா

இலங்கையில் பாரம் பரியமான விவசாயம் சிறு உற்பத்தியாளரை மையமாகக் கொண்டே காணப்பட்டது. ஒரு விவசாயி 2 ஏக்கர் நிலத்தை உடமையாக கொண்டிருந்தார். இலங்கையில் 6 லட்சம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன. இதே நேரம் உலகில் 1 பில்லியன் சிறு உற்பத்தி விவசாயிகள் உள்ளனர். இந்த உலகில் வாழும் முழு மனித சமூகத்திற்கும் உணவை இவர்களே வழங்குகின்றனர்.

ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் துரித சனத்தொனை வளர்ச்சியில் உணவுத்தேவை அதிகரித்தது. எனவே இவர்களின் உணவுத் தேவைக்காக நவீன விவசாய முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு பசுமைப் புரட்சி என்றும் நாமம் சூடப்பட்டது. இரசாயன உரவகைகள் உபயோகிக்கப்பட்டு, குறைந்த காலப் பகுதியில் அறுவடை செய்யக் கூடிய பயிர் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு, விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விஞ்ஞானமுறையில் விவசாய முயற்சி, நவீன தொழில் நுட்ப வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்முறையினால் ஏற்படக் கூடிய பக்கவிளைவுகள் பற்றி கவலைப்பட வில்லை. இவர்களின் நோக்கம் இலாபம் ஒன்றே. எனவே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த முறைக்கு பல்தேசியக் கம்பனிகள் உரிமையாளர் ஆகினர். இப் கம்பனிகள் லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா நாடுகளின் விவசாயத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தன.

பசுமைப் புரட்சியின் விளைவு

- சுற்றுப்புறச் சூழல் நாசமாகியது
- மண்வளம் இழக்கப்பட்டது
- தண்ணீர் நஞ்சாகியது
- காற்றுக் கூட மாசாகியது
- மனித உயிர்கள் உட்பட அனைத்து ஜீவராசிகளினதும் சுகாதார நிலைமைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளானது.

சலரோகம்
இருதயநோய்
புற்றுநோய்

மனித சமுதாயர்தை அச்சுறுத்தும் நோய்களாகின. இவையாவும் இரசாயன உரைவகைகளின் பாவனையால் ஏற்பட்ட விளைவாகும். கால்நடை வளர்ப்பிலும் பசுமைப் புரட்சியின் முறைமை பின்பற்றப்பட்டது. இரசாயண உணவு வகைகள் மிருகங்களுக்கு வழங்கப்பட்டு, அதிக விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டன. குறைந்த பிரதேசத்துக்குள் அதிக கால்நடை வளர்க்கப்படும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை யாவற்றிலும் மனித சமுதாயம் பாரிய சுகாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் நிலை உருவானது. இன்று கிராமிய விவசாயம் நாசமாக்கப்பட்டுள்ளது. மண் அமிலத்தன்மை ஆகியது. பாரிய சந்தைகள் உருவாக்கப்பட்டன. மக்களுக்கான உணவு என்றநிலை இல்லாமல் காசுக்கான உணவு என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே தேயிலை, இறப்பர், தேங்காய் முதன்மையான விவசாய அந்தஸ்தை பெற்றன. அனைத்து உற்பத்திகளும், ஏற்றுமதியை நோக்கமாக கொண்டிருந்தன.

பாரம்பரிய விவசாய முறைமை.

3

# காணாமல் போனோரை தேடியறியும் குழு வெளிப்படுத்தும் உண்மைகள்

பெருமாள் பூமிநாதன்
( முழுநேர பணியாளர்)



காணாமல் போனோரை தேடி அறியும் குழு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகின்றன. திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர் கொழும்புக்கு வருகை தரும் போது கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக காணாமல் போய் இருந்தார். இவரது விடயமே நாம் முதலில் எடுத்த முறைப்பாடு ஆகும். இதனை தொடர்ந்து பலர் காணாமல் போகும் நிலையும் வெள்ளைவான் கடத்தல்கள் அதிகரித்த நிலையும் காணப்பட்டது. இதற்கு எதிராக நாம் இந்த அமைப்பை நிறுவி போராட்டத்தில் குதித்தோம். இதன் பின்னர் பல போராட்டங்களை நடததியிருந்தோம். இதன் பின்னரே நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எம்மிடம் தற்போதுஅ 3400 காணாமல் போனவர்களின் விண்ணப்பங்கள் உள்ளன. தொடர்ந்தும் விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. தினமும 50 குறையாத தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. எம்மிடம் கிடைக்கும் விண்ணப்பங்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஆவணபடுத்தப்படுகின்றன. இவை தொடர்பாக அரசாங்கத்துக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்கப்படுகிறது. இறுதியாக ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கு தகவல்கள் அனுப்புகின்றோம். ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு எமது ஆயிரம் முறைப்பாட்டை விசாரனை செய்வதாக தகவல் அனுப்பியுள்ளனர். ஜெனிவாவுக்கு தகவல்களை அனுப்பும்போது அதற்குரிய படிவம் உரியமுறையில் அனுப்பப்பட வேண்டும். மக்கள் படிவங்களை உரிய முறையில் நிரப்பாததால் விண்ணப்பங்களை திரும்பிவருகின்றன.

எமது அலுவலகத்துக்கு பலர் காணாமல் போனவர்கள் தொடர்பாக தினமும் வருகின்றனர். அவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் பல இடங்களுக்கு விசாரணைக்காக செல்கின்றோம். நாம் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பூசா தடுப்பு முகாம் சிறைச்சாலைகள் என பல இடங்களுக்கு உறவினர்களுடன் சென்று வருகின்றோம்.

மேற்படி நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதி செலவாகின்றது. நாம் சம்பந்தப்பட்ட குடும்பங்களிடம் இருந்து ஒரு சதத்தைக் கூட இதுவரை பெறவில்லை. இடதுசாரி விடுதலை முன்னணி இதற்கு பொறுப்பாக இருப்பதால் கட்சி நிதியே இதற்கு செலவாகிறது. மேலும் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்ன, இந்த அமைப்பின் போசகராக இருப்பதால் அவர் இந்த விடயங்களில் அதிக கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்றார்.

எம்மை தவிர வேறு எந்த அமைப்போ, வேறு எவரோ காணாமல் போனோர் தொடர்பான விடயத்தில் செயற்படவில்லை. போலியாக பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தி தேர்தல் நலன்களிற்கு இதை உபயோகிக்கின்றனர். ஆனால் நாம் அப்படி செயற்படவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என இன்று மார்தட்டுகின்றனர். இவர்கள் காணாமல் போனவர்கள் தொடர்பாக என்ன செயற்பாட்டில் இதுவரை காலமம் இருந்தனர் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா. நான் நினைக்கின்றேன் இது தொடர்பாக ஒரு கடிதக் கோவை கூட அவர்களிடம் இருக்காது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக நாம் 15க்கு மேற்பட்ட மறியல் போராட்டங்கள் நடத்தியுள்ளோம். அத்துடன் கண் கட்சி நடவடிக்கைகள் பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தியுள்ளோம். இந்தப் பிரச்சனைக்கு ஒர முடிவு வரும் வரை தொடர்ந்து போராடுவதில் நாம் உறுதியாக உள்ளோம். உண்மை நிலைகள் மக்களால் உணரப்படும் போது நாம் முதன்மை நிலையை பெறுவோம். அதுவரை எமது கடமையில் இருந்து இமியளவும் விலகாது திடசங்கற்பத்துடன் செயற்படுவோம்.

## சிறுகதை

# சிங்களத்தில் இல்லையே !



அந்தப் பகுதி சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியாகும். தமிழர்கள் மிகவும் குறைவாகவே வாழ்கின்றனர். அங்குள்ள கிராமசேவகர் ஒருவரின் அலுவலகத்தில் அன்று சனக் கூட்டம் காணப்படவில்லை ஒரு சிலரே நின்றனர். தனது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விண்ணப்பத்தில், கிராமசேவகரின் சிபார்சை பெறுவதற்காக சுகன்யா அங்கு வந்திருந்தாள். அங்கு நின்றவர்கள் தமது கருமங்களை முடித்துக் கொண்டு சென்றபின் சுகன்யா தனது பரீட்சை விண்ணப்பத்தை கிராமசேவகரிடம் கொடுத்தாள். அந்தப் படிவம் தமிழில் இருப்பதை பார்த்த அந்த கிராம சேவகர் சிங்களத்தில் இல்லாமல் இருப்பதால் தன்னால் ஒன்றும் செய்யமுடியாது என கூறினார். சுகன்யயா கிராமசேவனரிடம் நான் தமிழிப் பரிட்சாத்தி எனவே தமிழில்த்தான் படிவம் அனுப்ப வேண்டும் என பணிவாக கூறினாள். கிராமசேவகர் குழப்பத்துக்குள் சென்றார். சிறிது நேரத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்டு உமது பிரிவு வேறு கிராம சேவகருடையது, அவர் விடுமுறையில் இருப்பதால் நான் அவருக்காக செயற்படுகின்றேன். நீர் அவரிடமே போய் சிபார்சை பெறும் என் கையைவிரித்தார்.

சுகன்யா செய்வதறியாது திகைத்தாள். பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்பதற்காக இரவு பகலான படித்து வந்த சுகன்யாவுக்கு கிராம சேவகரின் பதில் பெரும் அச்சத்தை உருவாக்கியது. பரீட்சை விண்ணப்ப முடிவுத்திகதிக்கு ஒரு வாரமே இருந்தது. தனது பிரிவு கிராம சேவகர் எப்ப வரப்போகிறார். நான் எப்போ விண்ணப்பத்தை அனுப்புவது என கலங்கிய நிலையில் வீட்டை நோக்கி நகர்ந்தாள்.

சுகன்யா வரும் வழியில் அவளது அயலவரான கருணபால சுகன்யாவின் வாடிய முகத்தை அவதானித்துவிட்டு பிள்ளை என்ன கவலையாக போகின்றீர் என அவளை விசாரித்தார். கருணாபால சுகன்யாவின் தந்தையின் நண்பர், சிறந்த தொழிற்சங்கவாதி இன, மத, பேதங்களை கடந்து செயற்படுகின்றவர். கருணபால கேட்டவுடன் சுகன்யா அழத்தொடங்கி விட்டாள் அவளை ஒருவாறு சமாதானப் படுத்திய கருணபால விவரத்தை கேட்டறிந்த பின்னர், சுகன்யாவை பிரதேச செயலகத்துக்கு கூட்டிச் சென்றார்.

பிரதேச செயலகத்தில் உள்ள நிர்வாக அதிகாரியிடம் கருணபால விவரத்தை கூறியபோது அந்த அதிகாரியும், தமிழில் என்ன இருக்கிறது என்பதை எம்மால் நம்ப முடியாது. அந்த விண்ணப்பகாரரை நாம் எப்படி நம்ப முடியும் என குதார்க்கம் பேசினார். கருணாபாலாவுக்கு ஆத்திரம் தலைக் கேறியது. உடனே அந்த அதிகாரியிடம் ஒரு சிங்கள பிள்ளை என்றால் நீங்கள் இப்பிடி பதில் கூறுவீர்களா? தமிழ் தேசிய மொழி, தமிழ் அரச கரும தொழி உங்களுக்கு தமிழ் மொழி தெரிந்திருக்க வேண்டும் என ஒரு பிரசங்கத்தையே நடத்தி முடித்தார்.

அவ்வேளை அலுவலகத்துக்கு வருகை தந்த பிரதேச செயலாளர். கருணபாலாவையும் சுகன்யாவையும் அழைத்து விவரங்களை கேட்டறிந்து விட்டு இந்த பிள்ளையின் பிரிவு கிராம சேவையாளர் இன்னும் இரண்டு தினங்களில் கடமைக்கு வருவார். நீங்கள் அவரிடம் சென்று சிபார்சை பெற்றுக் கொள்ளுங்கள், அதில் ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் என்னிடம் வாருங்கள் நாள் உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றேன் என கூறி சுகன்யாவையும், கருணபாலாவையும் சமாதானப் படுத்தி அனுப்பினார். சற்று நம்பிக்கையுடன் சுகன்யா வீடு சென்றாள்.

இரண்டு தினங்கள் கழிந்த பின்னர் தமது கிராம சேவகரிடம் சுகன்யாவும், கருணபாலாவும் சென்றபோது அவர் எந்த கேள்வியும் கேட்காமல் கையெழுத்து இட்டு சுகன்யாவை அனுப்பி வைத்தார்.

சுகன்யா பரீட்சையில் சித்தியடைந்ததை விட அதிக சந்தோசத்தில் வீடு திரும்பினாள். கருணபால மாமாவுக்கு நூறுமுறை நன்றி சொன்னாள்.

முற்றும்.

(அமுதா)

Registered as a News Paper in Sri Lanka

புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

# வறுமையின் பிடியில் வன்னி மக்கள்

ரோம பேரரசின் நீரோ மன்னன் ரோமானிய மக்கள் அனைவருக்கும் ஒரு கழுத்து மட்டும் இருந்திருந்தால் ஒரே முறையில் அனைவரையும் வாளால் வெட்டி கொல்ல முடியும் என கூறினானாம். இதை அலெக்சாண்டர் டுமா என்ற பேரறிஞர் எழுதியுள்ளார். இதே போன்றே விடுதலைப்புலிகளை முழுமையாக அழிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் துடைத்தெறிய முடியும் என மகிந்த ராஜபக்ச அரசாங்கம் எண்ணுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் வன்னிமக்களின் வாழ்க்கை நிலமைகள் மிக மோசமான நிலையில் உள்ளது. இத்தகைய நிலமைகள் ஊடாக இம்மக்களின் இனத்துவ அடையாளங்களை முடிவுக்கு கொண்டுவர முடியும் என அரசாங்கம் எண்ணுகிறது.

வடபகுதி முழுவதையும் பிணக்காடாக்கி அதை தென் இலங்கை முழுவதும் மகிழ்ச்சி விழாவாக்கி பாற்சோறு வழங்கி கொண்டாடிய ஆட்சியாளர்கள் அதனூடாக தேர்தல்களிலும் வெற்றியின் மேல் வெற்றியை பெற்றார்கள் உண்மையில் வடபகுதியில் மனித இனமே வாழவில்லை என்ற நிலையிலேயே அரசாங்கம் செயற்பட்டது.

இன்று இன்னும் 2 லட்சம் மக்கள் அகதிகளாக உள்ளனர். அரசாங்கம் இம்மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதுவும். இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை மேலும் இம்மக்களுக்கு உரிய உதவிகள் கிடைக்காமல் இருப்பதற்கு அரசசெயற்பாடுகளே காரணமாக உள்ளன.

தற்போது வன்னி மக்களுக்கு உரிய சர்வதேச உதவிகள் கிடைப்பதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன. குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகள் இம்மக்களுக்குகிடைக்காமல் இருப்பதற்கும் அரசாங்கத்தின் செயற்பாடே காரணமாக அமைந்துள்ளது.

இவ்விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளையோ, அவர்களின் கோரிக்கைகளையோ அரசாங்கம் செவிசாய்க்காமல் இருந்து வருவதே இதற்குரிய காரணமாகும். அகதிகளுக்கான உதவிகள் வழங்கும் அமைப்பு இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தில் இயங்குகிறது. இந்த அமைப்பினால் எத்தகைய பிரியோசனமும் இல்லை என ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ச கூறியுள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடும் இவரின் கருத்தின் போக்கிலேயே உள்ளது.

மேற்படி நிலைமையினால் வடபகுதியில் வாழும் இடம்பெயர்ந்த மக்கள் பாரிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். கல்வி, சுகாதாரம், சத்துள்ள உணவு, மட்டுமல்லாது சிறுவர்களின் பராமரிப்பு பாலியல் தொடர்பான பிரச்சனைகள், உளவியல் பிரச்சனை போன்ற பல பிரச்சனைகளுக்கு இம் மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இவை எது பற்றியும் அரசாங்கம் கவலை கொண்டதாக தெரியவில்லை.

தற்போது 99066 தற்காலிக கூடாராங்களில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மெனிக் முகாமில் 93926 போர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 183755 மக்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் இவர்களை சொந்த இடங்களில் குடியேற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. இவர்களில் 83720 பேர் சொந்த இருப்பிடங்களில் இருந்தாலும், 98842 பேர் இன்றும் அவர்களின் உறவினர்களுடனேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் படும் கஸ்டம் வார்த்தைகளில் கூற முடியாததாகும் சிலர் சொந்த இடங்களில் குடியேறி இருந்தாலும் அவர்களின் முன்னைய நிலமைகளுக்கு அவர்களை வாழவைப்பதற்கு உரிய எதையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. யுத்தத்தின் மூலம் சகலதையும் இழந்த இம்மக்கள் எப்படி குழந்தைகளை பராமரிக்க முடியும்.

இன்றும் முகாம்களில் வாழும் 1 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் எத்தகைய நம்பிக்கையும் அற்ற நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இம்மக்களின் பிள்ளைகள் 15000 பேர் சிறைகளில் இருப்பதால் எப்படி அவர்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளில் இறங்க முடியும். அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை இம்மக்களுக்கு கிடைக்காமல் செய்வதில் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வடக்கில் வசந்தம் என்று கூறும் அரசாங்கம் வீதிகளை அபிவிருத்தி செய்வதில் மட்டும் கவனத்தை செலுத்துகிறது. மேலும் இந்திய முதலீட்டாளர்களுக்கு வடக்கின் வளங்களை தாரை வார்ப்பதில் ஈடுபட்டுவருகிறது. தமிழ் மக்களின் துயரநிலையை பேரினவாதத்தின் வெற்றியாக காட்டி அரசியலில் நிலைக்க அரசாங்கம் முயல்கிறது என்பதே உண்மையாகும்.

வாகர்களுக்கு..!
உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி

வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info



# இந்திய அரசால் மாவோ வாதிகள் வன்முறைக்குள் செல்ல நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்



**அருந்ததி றோய்**

சி.என்.என், ஐ.பி.என் தொலைக்காட்சி பேட்டியில் அருந்ததி றோய் வழங்கிய செவ்வி செவ்வி கண்டவர் சாகரிக்கா கோஸ்.

சாகரிக்கா கோஸ் - நீங்கள் அவுட்லுக் மஞ்சரியில் எழுதிய தோழர்களுடன் நடக்கும் போது என்ற கட்டுரையில் மாவோவாதிகளுக்கு சார்பாக எழுதி உள்ளீர்கள் இது டென்ரதடாவில் 76 இந்திய பாதுகாப்பு படையினர் கொல்லப்படுவதற்கு முன்பாகும் தற்போதும் நீங்கள் மாவோ வாதிகள் மீது அனுதாபம் கொண்டுள்ளீர்களா?

அருந்ததி றோய் - இன்று வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. மாவோ வாதிகளால் பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டதும் இதுதான் முதற்தடவை அல்ல 2005ம் ஆண்டுக்கும் 2007ம் ஆண்டுக்கும் இடையில் நடைபெற்ற தாக்குதல்கள் பற்றி நான் முன்பே எழுதி இருந்தேன். இன்று ஒரு பகுதி மக்கள் பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டமைக்கு மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய மறுபகுதியினர் மாவோ வாதிகளை ஒழித்து கட்டவேண்டும் என்று கூறுகின்றனர் இங்கே பிரச்சனை இதுவல்ல இங்கே மரணமடையும் ஒவ்வொரினதும் மரணமும் மிகப்பெரிய சோகத்தை ஏற்படுத்துகின்றது. தற்போது உள்ள முறைமையின் விளைவாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது ஏழைகள் மீது வசதி படைத்தோர் யுத்தம் செய்யும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது வசதி படைத்தோர் ஏழைகள் மீது மிகவும் ஏழைகளை யுத்தம் புரிய வைத்துள்ளனர். இங்கே பாதுகாப்பு படையினர் இந்தசூழ் நிலைக்கு பலியாகி உள்ளனர். உண்மையில் மாவோவாதிகளால் இவர்கள் வஞ்சிக்கப்படவில்லை. தற்போது உருவாக்கப்பட்டுள்ள. நிலமையே இவர்களுக்கு இயமனாகி உள்ளது

சாகரிக்கா கோஸ் - யார் இந்த வன்முறை நிலமைக்கு காரணமானவர் அரசாங்கம் கூறுகின்றது.தாம் இப்பகுதிகளில் அபிவிருத்தியை மேற் கொள்ளும் போது அதாவது பாலங்கள். பாடசாலைகள், என்பவற்றை தொடங்கும் போது மாவோ வாதிகள் அதை தகர்த்து வருகின்றனர். இதனால் தான் நாம் இந்த நடிடவடிக்கையை மேற்கொள்கின்றோம் என அரசாங்கம் கூறுகின்றது. இந்த வன்முறைநிலைக்கு காரணம் என்ன என நீங்கள் கூறுகின்றீர்கள். அரசாங்கம் இந்த நடவடிக்கைகளில் இருந்து வாபஸ்பெற்றால் என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்.

அருந்ததி திறோய் மருத்துவ மனைகள் பாடசாலைகள், போசாக்கின்மை நல்ல நிலைகளில் இருக்கும் பகுதிகளில் மாவோ வாதிகள் இல்லையா? உண்மையில் பிரச்சினை அதுவல்ல. மருத்துவர்கள் மேற்கொண்ட ஆய்வு பற்றி பியனக் சென் குறிப்பிடுகையில் போசாக்கின்மை தொடர்பான உதவிகள் நடைபெறுகின்றனதான் ஆனால் நீங்கள் அங்குள்ள பாடசாலைகளைச் சென்று பார்த்தால், பாடசாலைகள் படைவீரர்கள் தங்குவதற்கான இடங்களாக உள்ளன. இவை பற்றிக் கேட்டால், மாவோ வாதிகள் அபிவிருத்தி முயற்சிகளுக்கு தடையாக இருப்பதால், இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது மோசமான பதிலாகும்.

சாகரிக்கா கோஸ்: நீங்கள் அரச வன்முறைகளை கண்டிக்கின்றீர்கள் நக்ஸ்லயிட்டு, மற்றும் மாவோ வாதிகள் வன்முறைகளை நீங்கள் ஏன் கண்டிக்கவில்லை நீங்கள் வன்முறையை நியாயப்படுத்துவதுடன் அதனை ரசிக்கும் மனப்பான்மையையுடன் காணப்படுவதாக கூறப்படுகிறது. உங்களது கட்டுரையில் நான் வன்முறையில் எதுவித நன்மையும் இல்லை என்பதை உணர்கின்றேன். ஆனால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு என்ன போராட்டத்தை செய்யுமாறு கோர முடியும். நீதி மன்றம் செல்லுங்கள், கூட்டம் வையுங்கள், உண்ணவிரதப் போராட்டம் நடத்துங்கள், எந்த கட்சிக்கு வாக்களியுங்கள், எந்த ஜனநாயக கட்டமைப்பை அணுகுங்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு உள்ளீர்கள். எனவே வன்முறையற்ற போராட்டத்தில் நன்மை இல்லை என எண்ணுகிறீர்களா?

அருந்ததி றோய் - இது அபத்தமான குற்றச்சாட்டு ஆகும்.

வன்முறையற்ற போராட்டங்கள் தொடர்பாக 10 வருடங்களாக விமர்சனம் செய்துவரும் ஒருவர் மீது இங்கனம் விமர்சனம் மேற்கொள்ளப்படுகிறது. நான் காட்டுக்குள் சென்று பார்த்த போது வன்முறையற்ற எதிர்பால் பலன் இல்லை என்பது தெளிவாகிறது.

நர்மதா அணைக்கட்டு விடயத்தில் வன்முறையற்ற இயக்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலும் பல வன்முறையற்ற அமைப்புக்கள், தீவிரவாத அமைப்புக்கு இத்தகைய நிலையே ஏற்பட்டது. ஒரு அமைப்பினுள் இத்தகைய நிலமை ஒரு பகுதியாக இருக்க முடியும். முழு அமைப்பும் வன்முறையற்ற எதிர்ப்பு கொண்டதாக இருக்க முடியாது. வன்முறையற்ற இயக்கத்திற்கு வெகுஜன அரங்கு தேவை. ஆனால் காட்டுக்குள் வெகுஜன தளத்தை எதிர்பார்க்க முடியாது. ஆயிரக் கணக்கான பொலிசார், படைவீரர், காட்டுக்கள் இருக்கும் கிராமத்தை சுற்றி வளைத்தால் என்ன செய்ய முடியும். பட்டினியில் இருப்பவனால் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த முடியுமா? பணம் இல்லாதவனால் வரி பகிஸ்கரிப்புப் போராட்டம், இந்நிய நுகர்வு பொருட்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட முடியுமா? அவர்களிடம் எதுவுமே இல்லை. காட்டுக்குள் வன்முறை இருப்பதை பார்த்தேன். அது எதிர்ப்பு வன்றையாகும். வன்முறைநிலைமைகள் அதிகரிப்பதையிட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். வன்முறைகள் அதிகரிக்க அரசாங்கம் ஆயுதப் பலத்தை அதிகரித்து வருகின்றபோது தற்போது இறுதியில் ஆயுதங்கள் மாவோவாதிகள் கரங்களுக்கு சென்றுள்ளது. இதுவே ஒரு சமூகம் எதிர்நோக்கும் பயங்கரமான நிலையாகும். நான் நினைக்கவில்லை இதில் ஏதும் ரசிப்பு இருப்பதாக. ஆனால் நான் ரசனைக்கு எதிரானவரும் அல்ல. இந்த ஏழை மக்கள் பலம் பொருந்திய அரசுக்கு எதிராக போராட நிமிர்ந்து நிற்பதைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டேன். இந்த ஏழைகளுக்கு எதிராக ஏ.கே.47, கிறெநெட்டுடன் இவர்களை என்ன செய்கிறார்கள்.

இப்பத்திரிகை லீனஸ் ஜயதிலக என்பவரால் கொழும்பு 02, ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது